# கச்சதீவு விவகாரம்; இலங்கை அரசு ஆட்சேபம்

பொது ... 18-8-1991

விலை ரூபா 5-00

# ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 2 இதழ்: 188
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 18-8-1991

[கொழும்பு]
கச்சதீவுதொடர்பாகசெல்வி ஜெயலலிதா எழுப்பிய பிரச்னை தொடர்பாக இலங்கை அரசு இந்திய மத்திய அரசுக்கு ஆட்சேபனை தெரிவித்துள்ளது.
(4ம் பக்கம் பார்க்க)

## பிரிட்டனை விட்டு கிட்டு வெளியேறினர்?

(லண்டன்)
விடுதலைப்புலிகள் இயக்க சர்வதேசப்பிரதிநிதியான திரு. கிட்டு பிரிட்டனிலிருந்து வெளியேறிவிட்டதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத சில செய்திகள் தெரிவித்தன.
(4ம் பக்கம் பார்க்க)

## இராணுவ முகாம்களை அகற்ற கோரிக்கை

(கொழும்பு)
கொழும்பு நகரில் பொது மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளில் அமைந்துள்ள இராணுவ முகாம்களையும் பாதுகாப்பு நிறுவனங்களையும் அகற்றும்படி, பொது மக்கள் அரசைக் வற்புறுத்தி
(4ம் பக்கம் பார்க்க)

★ வடக்கு-கிழக்கு பிரச்னை தீரும்வரை

# இலங்கை-இந்திய மீனவர்கள் கச்சதீவில் மீன்பிடிக்கத் தடை

## அரசு அவசர உத்தரவு; கடற்படை விரைவு

(கொழும்பு)
இலங்கைக்கு சொந்தமான கச்சதீவில் மீன்பிடிக்க இலங்கை-இந்திய மீனவர்களுக்கு இலங்கை அரசு தடைவிதித்துள்ளது. வடக்கு-கிழக்கு பிரச்னை தீரும் வரை இந்த தடை அமுலிலிருக்கும். இதையடுத்து இலங்கை கடற்படையினர் கச்சதீவிற்கு விரைந்துள்ளனர்.

இந்த அவசர உத்தரவை இலங்கை வெளிநாட்டமைச்சு நேற்றுக் காலை வெளியிட்டது. தமிழக முதல்வர் எழுப்பிய பிரச்னையை அடுத்தே இவ்வவசர உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

1974ம் ஆண்டு கச்சதீவு இலங்கை அரசுக்கு சொந்தமாக இந்திய அரசால் உடன்படிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்டது.

வடக்கு – கிழக்கில் மீண்டும் சுமுக நிலை ஏற்பட்டால்தான் கச்சதீவில்மீண்டும் மீன்பிடிக்க அனுமதிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு விடுத்த இந்த அவசர உத்தரவையடுத்து கடற்படையினர் பெருமளவில் அத்தீவுக்கு அனுப்பப்பட்டுள்ள
(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளைச் சந்திக்க நியூஸிலாந்து குழு வருகிறது

(கொழும்பு)
இனப் பிரச்சனைக்கு தீர்வொன்றை ஏற்படுத்துவதற்காக விடுதலைப் புலிகளைச் சந்திப்பதற்காக நியூஸிலாந்து நாட்டைச் சேர்ந்த சமாதானக் குழுவொன்று விரைவில் யாழ்ப்பாணம் வரவுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.
(4ம் பக்கம் பார்க்க)

ஆனையிறவு - வெற்றிலைக்கேணி பாதையில்

## புலிகள் ஊடுருவி தாக்குதல் பெருமளவு படையினர் பலி

[யாழ்ப்பாணம்]
வெற்றிலைக்கேணிக்கும்-ஆனையிறவு முகாமிற்குமிடையிலான பாதையின் இடைநடுவில் புகுந்து புலிகள் நேற்று முன்தினம் காலை நடத்திய அதிரடித் தாக்குதலில் பல படையினர் கொல்லப்பட்டதாக தெரியவருகிறது.

இத்தாக்குதல் நன்கு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விநியோக பாதையை சீர்குலைக்கவே புலிகள் இந்நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் நேற்று முன் தினம் பலமணிநேரம் மோதல் இடம் பெற்றதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (சி–153)

## படுகொலைச்சம்பவ விசாரணை

[மட்டக்களப்பு]
கொக்கட்டிச்சோலை படுகொலைச் சம்பவங்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணைகள் இம்மாதம் 26ம் திகதி முதல் விமானப் படை முகாமில் மீண்டும் நடைபெறும்.

## ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் புலிகள்

(கொழும்பு)
ஆனையிறவு முகாமிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் புலிகள் மீண்டும் தமது பங்கர்களை அமைக்கத் தொடங்கியுள்ளதாக கூட்டுப்படை தலைமை பேச்சாளர் மார்க் செனிவிரத்ன தெரிவித்துள்ளார்.

ஆனையிறவு முகாமினுள் கடந்த 10ம் திகதியே ஹெலிகொப்டர் முதல் தடவையாக இறங்கியது. தொடர்ந்தும் முன்னேறுவதா இல்லையா என்பதை தரைப்படைத் தளபதிகளே தீர்மானிப்பார்கள் என்றும் அவர் கூறினார். (சி)

## 'ராவய' பத்திரிகைக்கு வெளிநாட்டு நிதி

[கொழும்பு]
'ராவய' சிங்கள வாரப்பத்திரிகைக்கு வெளிநாட்டு நிதி கிடைப்பதாக பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

இதன்காரணமாகவேபொலிசார் மேற்படி பத்திரிகை அலு
(4ம் பக்கம் பார்க்க)

## பெண் அதிரடிப் படைக்கு பிரிட்டன், இஸ்ரேல் பயிற்சி

[லண்டன்]
இலங்கையில் பெண்கள் விசேட அதிரடிப்படை ஒன்று உருவாக்கப்படவுள்ளது. இதற்கான பயிற்சியை பிரிட்டிஷ் எஸ். ஏ. எஸ். அதிகாரிகளும், இஸ்ரேல் மொஸாட் அமைப்பும் வழங்கவுள்ளதாக 'ராய்ட்டர்' செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இப்பெண்கள் அதிரடிப் படையணி தற்போதைய அதி
(4-ம் பக்கம் பார்க்க)

## 2 இராணுவம் பலி 12 பேர் படுகாயம்

(கொழும்பு)
ஆனையிறவு முகாம் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோதலில் 2 படையினர் கொல்லப்பட்டதுடன் 12 படையினர் படுகாயமடைந்தனர்.

முகாம் விஸ்தரிப்பு நடவடிக்
(4ம் பக்கம் பார்க்க)

## இராணுவ அதிகாரிகள் பலர் வெளிநாடுகள் விஜயம்

(கொழும்பு)
இலங்கை இராணுவ தளபதிகள் பலர் சீனா, பாகிஸ்தான் தென்-கொரியா ஆகிய நாடுகளுக்குக் கடந்த வாரம் அவசர பயணம் மேற்கொண்டுள்ளதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்துள்ளது.

புதிய இராணுவத் தளபாட கொள்வனவு செய்வதற்கே இவர்கள் இந்தப் பயணத்தை
[4-ம் பக்கம் பார்க்க]

## சமஷ்டி தீர்வுக்கு இந்தியா ஆதரவு!

[லண்டன்]
இலங்கை பிரச்னைக்கு சமஷ்டி முறையிலான தீர்வொன்று முன்வைக்கப்படும் பட்சத்தில் அதனை இந்திய அரசு ஆதரிக்கும் சாத்தியமிருப்பதாக 'லண்டன் பத்திரிகை' ஒன்று தெரிவித்துள்ளது.
(4ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்


### பழைய புத்தகங்கள்

பழைய புத்தகங்கள் சஞ்சிகைகள் விலைக்கு வாங்குவோம். புத்தகக்கடை கல்வியங்காடு. (சி-5127)

### விற்பனைக்கு

அல்சேஷன் ½ மாத நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. பூச்சி நீக்கப்பட்டவை. தொடர்பு: சி. ராஜேந்திரம் (பஜனை மாமா) மே/பா நியூ பார்மசி, 5-ம் கட்டை, ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய். (5131)

### மணமகன் தேவை

யாழ். இந்து நற் குடும்பம், அழகிய 30 வயது. ஆனால் இளமைத் தோற்றமும் லண்டன் தொழில் தகைமையும், கொழும்பில் கொம்பனியில் பொறுப்புள்ள பதவி வகித்து வரும் வீட்டு நிர்வாகத்தில் சிறந்தவரும். கிரக பாவ மற்றவருமாகிய ஒரே மகளுக்கு உயர் பதவி வகிக்கும், நிறம், குணமுள்ள மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். புதிய நவீன வீடு - வளவு உண்டு. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல சி-5110, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம் [சி-5110]

### ஜீவாகாரம்

இது ஓர் உள்ளூர் உற்பத்தி. இதில் தாய் - சேய்க்குரிய ஜீவசத்துக்கள் அடங்கியுள்ளது. கிடைக்குமிடம் அண்ணா கோப்பிக் கடை, யாழ்ப்பாணம். (ஏ-1500)

### தேவை

சில்லுப் பூட்டிய கதிரை (Wheel Chair) தேவை. வைத்திருப்போர் விலை விபரத்துடன் தொடர்புகொள்ளவும். விளம்பர இல. சி-5136, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். [சி-5136]

### தரன் ஸ்ருடியோ

பாஸ்போர்ட், அடையாள அட்டை - என்லாஜ்மென்ட், கலர்ப்படங்களுக்கும், றபர் சீல்கள், விளம்பர போட்கள், பிளாஸ்ரிக், ஸ்ரிக்கர்கள், டிசைன்கள் ஓவிய வேலைகட்கு தரன் படப்பிடிப்பாளர், 189, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-5065)


## புதிய அதிபர்

[வட்டுக்கோட்டை]

சுன்னாகம் கிறிஸ்தவ இறையியற் கல்லூரியின் புதிய அதிபராக வண. ரி. எஸ். பிரேமராசா நியமிக்கப்பட்டுள்ளார். [139]

## இரண்டரை வருட தாமதத்தின் பின் பரீட்சை முடிவுகள்

[யாழ்ப்பாணம்]

இலங்கை நிருவாகசேவை 1988 மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த இரண்டரை வருடகால தாமதத்தின் பின் அண்மையில் வெளியாகியுள்ளது.

இப்பரீட்சையில் சித்தியடைந்த 17 பேருக்கு அண்மையில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது [153]

## விபரம் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கோட்டக்கல்வி அலுவலகங்களில் 01-0 -86 தொடக்கம் 26-6-90 வரை பணிபுரிந்த அதிபர்களின் விபரங்கள் சேகரிக்கப்பட இருக்கின்றன.

குறித்தகாலப் பகுதியில் பணிபுரிந்த அதிபர்கள் கோட்டக்கல்வி அலுவலகங்களில் இந்த விபரங்களை நேரில் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். (152)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

சித்த மருத்துவப் பிரிவிற்கு 1990/91-ஆம் ஆண்டிற்கான புதிய மாணவர்களை அனுமதித்தல்

மேற்குறிப்பிட்ட முன்னைய விளம்பரம் தொடர்பாக; விண்ணப்பம் யாவும் 21-09-1991வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்பதை கவனத்திற் கொள்ளவும்.

பதிவாளர்

(ஏ 1510)


# கடற்கரைப் பகுதியை அசுத்தப்படுத்தியவர்களுக்கு ரூ. 75 தண்டம்!

[கொழும்பு]

கொழும்பு பம்பலப்பிட்டி கடற்கரைப் பிரதேசத்தை அசுத்தப்படுத்திய குற்றத்திற்காக, தமிழ் அகதிகள் 50 பேருக்கு தலா 75 ரூபா கல்கிசை நீதிமன்றத்தால் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

அகதிகள் சார்பாக நீதிமன்றத்தில் ஆஜரான வழக்கறிஞர் திரு. கே. விஜயேந்திரா நீதிமன்றத்தில் தெரிவிக்கையில், மேற்படி முகாமில் நூற்றுக்கணக்கான அகதிகள் தங்கியிருப்பதாகவும் அங்கு நாலு மலசல கூடங்களே அமைக்கப்பட்டுள்ளதாகவும், இவற்றையே ஆண்களும் பெண்களும் பாவிக்க வேண்டியிருக்கிறது. அதிகாலை வேளைகளில் நெருக்கடி ஏற்படுவதினாலேயே அகதிகள் கடற்கரை ஒதுக்குப்புறங்களை நாடிச்செல்லவேண்டிய நிலை ஏற்பட்டதென்று நீதிபதியிடம் தெரிவித்தார்.

இதற்கு நீதிபதி பதிலளிக்கையில் கூறியதாவது; 'அகதிகள் வெளியில் இருப்பதைவிட சிறைக்குள் இருந்தால் அங்கு அடிப்படை மனித உரிமைகள் கிடைக்கும் வாய்ப்புஉண்டு' என்று கூறியதுடன் அகதிகளுக்கு உடனடியாக சகல வசதிகளையும் செய்துகொடுக்கும்படி சமூகசேவை அமைச்சு, சுகாதார அமைச்சு மாநகர சபை ஆகியவற்றுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளதுடன் இது போன்ற வழக்குகளை நீதிமன்றத்துக்குக் கொண்டுவந்து நீதிமன்றத்தின் நேரத்தை வீணாக்கவேண்டாம் என பொலிஸாரைக் கேட்டுக் கொண்டார்.

கடந்தவாரம் கொழும்பு கல்கிசை நீதிமன்றத்தில் நடைபெற்ற மேற்படி வழக்கில் அகதிகளின் சார்பில் வாதாடுவதற்காக பல தமிழ் வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தது குறிப்பிடத்தக்கது. (வி)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1991-09-13 ஆம் தேதி வரை விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

சமூக மருத்துவத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I./

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II.

சம்பள அளவுத்திட்டம்

1. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I — ரூபா 9,600- 8x250- 11,600/- [மாதமொன்றுக்கு)

2. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II — ரூபா: 8,000- 5x250- 9,250/- [மாதமொன்றுக்கு]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக் கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல்வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களைத் தபாலில் பெற விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுய முகவரியிட்டு ரூபா 1-50 முத்திரை ஒட்டப்பட்ட 23X10 ச மீ. அளவுடைய கடித உறை அனுப்பப்படல்வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற்கொண்டு சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

பதிவாளர்,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
1991-08-12. (ஏ 1511)


## அனுப்பி வைப்பு

(மானிப்பாய்)

ஜூன் மாதத்திற்குரிய சகல பென்சன் காசோலைகளும் யாழ். செயலகத்திலிருந்து வங்கிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

ஓய்வூதியம் பெறுபவர்கள் தத்தம் வங்கிக் கிளைகளுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ் செயலக ஓய்வூதியப் பிரிவுக் கணக்காளர் திரு. சா. வீரசிங்கம் கேட்டுள்ளார். (71)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்]

பூநகரி- வாடியடி வர்த்தர் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 1 மணியளவில் பூநகரி மத்திய சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும். (23)

0 0

(யாழ்ப்பாணம்]

'அரியாலை மேற்கு கிராம அபிவிருத்திச்சங்கம், மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம்' ஆகியவற்றின் விசேட பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. நல்லூர் உதவி அரச அதிபர், கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர், செயலக அதிகாரிகள் மற்றும் கிராம சேவையாளர்கள் கலந்துகொள்வர்.''

## மருத்துவ 'சேவையாளர் பரீட்சை நடாத்தப்படும்

[கொழும்பு]

வடக்கு - கிழக்கு மருத்துவ சேவையாளருக்கு தனியான பரீட்சை ஒன்று மிக விரைவில் நடாத்தப்படுமென்று சுகாதார மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத் தெரிவித்துள்ளார்.

மருத்துவ சேவையாளர், நடுத்தர தொழில் நுட்ப ஊழியர்களுக்கான பரீட்சை கடந்த ஆனி மாதம் மற்றைய மாவட்டங்களில் நடைபெற்றதுகுறிப்பிடத்தக்கது.

இராணுவ நடவடிக்கைகளினால் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மேற்படி பரீட்சையை நடத்த முடியவில்லை என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (வி)

## கிளிநொச்சியில்பாடசாலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளை மீண்டும் திறக்க கல்விப் பணிப்பாளர் திரு. கந்தசாமி நடவடிக்கைஎடுத்து வருவதாக கல்விப்பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன.

இராணுவ நடவடிக்கைகளை அடுத்து மாவட்டத்தில் சகல பாடசாலைகளும் மாதக்கணக்காக மூடப்பட்டுள்ளன. இதனையடுத்து பாடசாலை அதிபர்களின் கூட்டமொன்றை கல்விப்பணிப்பாளர் திரு. கந்தசாமி கூட்டி பாடசாலைகளை திறந்து நடத்தக்கூடிய சாத்தியம் உள்ள பாடசாலைகளை திறக்குமாறு கேட்டுக்கொண்டார். (83)

## செல்வச்சந்நிதி மஹோற்சவம்

[யாழ்ப்பாணம்]

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி வருடாந்த மஹோற்சவம் கடந்த 10-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது.

இன்று ஞாயிற்றுக்கிழமை பூங்காவனமும் 23-ம் திகதி சப்பறமும், 24-ம் திகதி தேர்த் திருவிழாவும், 25-ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

## காலமானார்

[சென்னை]

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரும், முன்னாள் கர்நாடக முன்னாள் முதல்வருமான அச்சுதமேனன் நேற்றுமுன்தினம் மாரடைப்பால் காலமானார்.


வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

நிரு ரியுசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

A/L 92

பகுதி I

தேசிய வருமானம்

பகுதி II

வரவு செலவுத் திட்டம்

திரு உதயன்

ஆரம்பம் 19-08-1991 (திங்கள்)

(ஏ 1509) நிர்வாகி,

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி வருடாந்த மஹோற்சவம்

| | | |
|---|---|---|
| பூங்காவனம் | 18-8 91 | ஞாயிறு பகல் 10-00 மணி |
| சப்பறம் | 23-8-91 | வெள்ளி மாலை |
| தேர் | 24-8-91 | சனி காலை |
| தீர்த்தம் | 25-8-91 | ஞாயிறு பகல் |
| | | அன்று மாலை மௌனத்திருவிழா |

முக்கிய குறிப்பு:

திருவிழா சம்பந்த விடயம் பற்றியும் ஆலய கைங்கரியங்கள் பற்றியும் சிவஸ்ரீ க. உலககுருநாத ஐயரிடம் தொடர்பு கொள்க.

(சி-5137) ஆலய உரிமையாளர்.

## ★ ஆனையிறவு முகாம் தாக்குதலின்போது

# அரச படையினருக்கும் புலிகளுக்குமிடையில் பல தடவைகள் வாய்ப்போர் இடம்பெற்றது

## - சார்ஜன் மேஜர் கொடமுன

(நேற்றைய தொடர்ச்சி)

முகாம் மீதான புலிகளின் முற்றுகை ஆரம்பித்த நாள் முதல் படையினர் மத்தியில் பெரும் பதற்றம் நிலவியது. இதனைப் போக்கச் சகலரும் கண்டபடி 'சிகரெட்' புகைத்தனர் வழமைக்கு மாருக எல்லோரும் அதிகளவு 'சிகரெட்' பாவித்தனர்.

முதல் நாளிலேயே முழுவதும் முடியுமளவிற்குச் 'சிகரெட்'டைப் பாவித்துவிட்டனர். 'சிகரெட்' முடிந்துவிட்ட நிலையில் படையினர் பெரும் கஷ்டப்பட்டனர். எனினும் அதற்கும் அவர்கள் ஒரு வழி கண்டுபிடித்துவிட்டனர்.

படையினரின் பாவனைக்கென வைத்திருந்த தாள்த் தேயிலையை எடுத்து. அங்கிருந்த நன்னாரி இலையையும், நொச்சி இலையையும் ஒன்ருக்கிச் சிறிய பேப்பர் துண்டுகளில் வைத்து மடித்து, சிறிய நூலால் கட்டி 'சிகரெட்' போல் உருவாக்கிவிட்டார்கள். இதனையே பின் பாவித்தார்கள்.

(ஆனையிறவு முகாம் முற்றுகையினுள் இருந்த இராணுவ மருத்துவ பிரிவைச் சேர்ந்த மேஜர் கொடமுன 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியின் இறுதிப் பகுதியை இங்கு தருகின்றேம்.)

இதற்கிடையில் காவலரண்களில் நின்ற படையினரும், பாதுகாப்பான பதுங்குகுழிகளிலிருந்த புலிகளும் பேச்சுப்பட்டார்கள். பல தடவைகள் இரு தரப்பும் வாய்ப்போர்கூடச் செய்துள்ளார்கள். இவையெல்லாம் கடும் யுத்தம் நடைபெறும்போது ஆங்காங்கே இடம்பெறும் சம்பவங்களாக இருந்தன.

தரையிறக்கப்பட்ட படையினரின் முன்னேற்றம் பெருமளவில் தடைப்பட்டிருந்தபோது, புலிகள் முகாமை நோக்கி மிக உக்கிரமாகத் தாக்கி முன்னேற்றம் அடைந்திருந்தனர் இது அவர்களின் மனநிலையை உத்வேகப்படுத்தி இருக்கவேண்டும். அவர்களும் தமது முயற்சிகளை மிக உக்கிரமாகத் தொடர்ந்த வண்ணம் இருந்தனர்.

புலிகளின் தாக்குதலில் படையினருக்குச் சேதமேற்படுவதும், படையினரின் தாக்குதலில் புலிகளுக்குச் சேதம் ஏற்படுவதுமாகத் தொடர்ந்துகொண்டே இருந்தது காயப்பட்டுப் பெருமளவு படையினர் சிகிச்சைக்காக வந்தவண்ணம் இருந்தனர்.

### புலிகளின் தாக்குதல்

விமானப்படையும் மிக ஆக்ரோஷமாக தாக்கியவண்ணமிருந்தது. புலிகளின் பசிலன், ரொக்கட், மோட்டார் தாக்குதல்களினுல் முகாம் தொடர்ந்தும் அதிர்ந்தவண்ணமிருந்தது. பல பகுதியிலும் பெரும் சேதம் ஏற்பட்டவண்ணமிருந்தது. எனினும் படையினரும் தொடர்ந்து தாக்குதலை நடாத்திக்கொண்டிருந்தனர்.

'பலவேகய' படையினர் முன்னேறி குறிப்பிட்ட தூரம் வந்தது எமக்கு பெரும் நிம்மதியை ஏற்படுத்தியது. எப்படியாயினும் எம்மை காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கை பிறந்தது. இவ்வேளைகளில் முகாமிற்கு வெளியே குறிப்பிட்ட தூரத்தில் மிக உக்கிரமான மோதல் இடம்பெற்றது.

கடைசிநேரத்தில் முகாம் பகுதியிலும் வெளியேயும் மிக உக்கிரமான மோதல்கள் நடந்தது. விமானங்கள் இரு பகுதியிலும் அகோரத் தாக்குதலை நடாத்திக்கொண்டிருந்தது. எங்கும் ஒரே குண்டுச் சத்தம். சகல பகுதியும் அதிர்ந்த வண்ணமிருந்தது.

### 5 பேருக்கு சிகிச்சை

இறுதியில் ஆகஸ்ட் 3ம் திகதி 'பலவேகய' படையினர் ஆனையிறவு முகாமையடைந்தனர். முற்றுகை நாட்களில் 102க்கும் மேற்பட்ட படையினருக்கு பலத்த காயங்களுக்காக சிகிச்சையளித்திருந்தோம். இதில் 5 பேருக்கு அவயவங்கள் நீக்கிய சத்திர சிகிச்சை மேற்கொண்டிருந்தோம்.

முகாமினுள் புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்ட படையினரின் சடலங்கள் அங்கேயே இராணுவ மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது. இந்த சடங்கில் பலவேகய படையினரும் கலந்துகொண்டனர்.

ஆகஸ்ட் 4ம் திகதி, பலத்த காயப்பட்ட 11 படையினர் 'ட்ராக்டர்' மூலம் வெளியேற்றப்பட்டு வெற்றிலைக்கேணிக்கு கொண்டுசெல்லப்பட்டனர். செல்லும் வழியில் ட்ராக்டர் மீது புலிகளின் கடும் தாக்குதல் இடம்பெற்றது. ஒருவாறு காயப்பட்டவர்கள் வெற்றிலைக்கேணிக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

ஆகஸ்ட் 5-ம் திகதி காயப்பட்ட ஏனைய படையினர் சிகிச்சைக்காக வெளியேற்றப்பட்டனர்; புதிய படையினர் முகாம் கொண்டுவரப்பட்டு அங்கிருந்த அனைவரும் வெளியேறினர்.

முகாம் முற்றுகைக்குள்ளாகி அது விடுபடும் வரை இருந்த காலத்தை முகாமில் இருந்த எந்தச் சிப்பாயும் வாழ்க்கையில் மறக்கமாட்டார். (சி)

(முற்றும்)

---

## வளர்ந்தோர் கல்வித் திட்ட வகுப்புகள்

[யாழ்ப்பாணம்]

முறைசாராக் கல்விப் பிரிவினரால் ஒழுங்கு செய்யப்படும் வளர்ந்தோர் கல்வித் திட்ட வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. இத்திட்டத்தின் கீழ் இப் பிரதேசத்துக்குப் பொருத்தமான கல்வி, சமூக மேம்பாட்டுத் திட்டமிடல் ஆகிய விடயங்களில் பயிற்சி அளிக்கப்படும்.

இம்மாதம் 19, 20, 21-ஆம் திகதிகளில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும், 26, 27, 28-ஆம் திகதிகளில் யாழ். கனகரத்தினம் ம. ம. வித்தியாலயத்திலும் காலை 8 மணி தொடக்கம் 2 மணி வரை பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும்.

இவ்வகுப்புகளில் நாட்டமுள்ள ஆசிரியர், அதிபர்கள், பெற்றோர்கள் அவ்வப் பாடசாலைகளில் அமைந்திருக்கும் முறைசாரா வள நிலையப் பொறுப்பாளரிடம் தம் பெயர்களைப் பதிவு செய்யுமாறு கேட்கப்படுகின்றனர். (152)

---

## மழலைகள் பட்டாளம்தான் சாதனைகளைப் படைத்துள்ளது

(யாழ்ப்பாணம்)

''மழலைகள் பட்டாளம்' என்று சிறிலங்கா அரசின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் பரிகசித்த படையணிதான் இன்று பெரும் சாதனைகளை நிகழ்த்தியிருக்கிறது.''

இவ்வாறு ஆனையிறவுப் போர் பற்றித் தமிழீழ மக்களுக்கு ஆற்றிய உரையில் விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியைச் சேர்ந்த செல்வி ஜெயா தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது: ''விடுதலைப் போராட்ட வரலாற்றிலே புதிய பரிமாணம் ஒன்றினை ஆனையிறவுப் போர் வெளிப்படுத்தி நிற்கின்றது.

தமிழீழ மக்கள் ஓர் தேசிய இனம் என்பது இந்தப் போருக்கூடாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

500க்குக் குறையாத வீரர்களை இக்களத்தில் நாங்கள் பறிகொடுத்திருக்கிறோம். 1,500க்கு மேற்பட்ட வீரர்கள் இக்களத்தில் விழுப்புண் ஏற்றிருக்கிருர்கள். இத்தகைய இழப்புக்கள் மத்தியிலும் நாம் பெரியதோர் சாதனையை நிகழ்த்தியிருக்கின்றோம்.

9 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறிலங்காவின் மரபுவழி இராணுவத்தை நேர் எதிர்கொண்டு போராடுகின்ற அந்த மனோபலத்தைக் கொண்டதாக எமது தேசியப் படை அணியை உருவாக்கி இருக்கின்றோம். இந்த மண்ணிலே எதிரி நிலைகொள்ளமுடியாது என்ற அச்சத்தை அவனுக்கு ஏற்படுத்தி இருக்கிறோம். எதிரியினது மனோபலத்தை உடைத்திருக்கிறோம்.

வெட்டை வெளியிலே 24 நாட்களுக்கு மேலாகப் பெரும் படையணி ஒன்றை நகரவிடாது தடுக்கின்ற பேராற்றலைக்கொண்ட படையணியாக நாம் வளர்ந்திருக்கின்றோம்.

உலங்கு வானூர்திகளோ, குண்டுவீச்சு விமானங்களோ தாழப் பறக்கமுடியாதபடி செய்திருக்கிறோம். பல கவச வாகனங்களைத் தகர்த்திருக்கின்றோம்.

இந்தப் போரானது தேசிய விடுதலை நோக்கிய எமது பாதையில் மட்டுமல்ல, சமுதாய விடுதலை நோக்கிய பாதையில் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது

இப்போரிலே 100க்கு மேற்பட்ட பெண் போராளிகளை இழந்திருக்கிறோம். பலநூற்றுக்கணக்கான பெண் போராளிகள் காயமடைந்துள்ளனர். இவர்களது மன உறுதியும், வீரமும் இன்று தமிழீழப் பெண்களை வழிநடத்திக்கொண்டிருக்கிறது. தங்கள் மீது விதிக்கப்பட்ட சமுதாய அழுத்தங்களை உடைத்துக்கொண்டு, எமது தேசியப் படை அணியிலே பெண்கள் இணைந்துகொண்டு இருக்கின்றனர். துணைப் படையாக இணைந்து செயற்பட வயது முதிர்ந்த பெண்கள் கூட இணைந்துகொண்டு இருக்கின்றனர்.

உலக நாடுகளிலே நடைபெற்ற எந்தவொரு விடுதலைப் போராட்டத்திலும் பார்க்கத் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றிலே இத்தகைய நீண்டநாள் போர் ஒன்றில், பெண்கள் போதிய உணவு இன்றி, நீரின்றி எந்தவிதமான ஆதார வசதிகளுமின்றி, வானத்தைக் கூரையாக்கிக் கொண்டு சமர் புரிந்துள்ளனர். ஆண்களுக்கு இணையாகச் சாதனைகள் படைத்திருக்கின்றனர்.

விடுதலைப் புலிகள் வரலாற்றுச் சாதனைகளை நிகழ்த்திக்கொண்டிருக்கிற இக்கால கட்டத்திலே மக்கள் பெரும்படையணியாகத் திரளவேண்டும்.

போராட்டத்தை எமது அடுத்த சந்ததிக்கு நகர்த்திவிடாது இன்றே எங்களுடைய காலகட்டத்திலேயே நாங்கள் விடுதலையை வென்றெடுக்க வேண்டுமாயின் எல்லோரும் தேசியப் படையணியுடன் இணைந்துகொள்ளவேண்டும். எதிரியை எம் மண்ணிலிருந்து விரட்டி, ஒழித்து எமது மண்ணில் தமிழீழ தேசியக் கொடியை பறக்கவிடும் நாள் வரை எம் கரங்கள் ஓயப்போவதில்லை. எம் இலட்சிய வேகம் ஓயப்போவதில்லை என்று அனைவரும் உறுதிஎடுத்துக்கொள்ளவேண்டும்''

---

## இராசி பலன்

18-08-1991

ஞாயிற்றுக்கிழமை

தமிழுக்கு ஆவணி 02

நவமி பி. இ. 4-22 வரை, அனுஷம் மு இ. 11-04 வரை. மரணயோகம் கரிநாள், இராகு காலம் மாலை 4-35 முதல் 6-05 வரை, சுபநேரம் காலை 9-05 முதல 10-35 வரை.

மேடம்: வசதிக் குறைவு, நிலைபெயர்வு, வைத்தியசெலவு.

இடபம்: வெற்றிக்களிப்பு. மனச்சந்தோசம், தொழில் சிறப்பு

மிதுனம்; குடும்பமகிழ்ச்சி, பணவரவு, சுபகாரியச்செலவு.

கடகம்: அடம்பிடித்தல், குடும்ப பிரிவு. காரியத்தடை.

சிங்கம்: இடமாற்றம், கடன் சுமை, வெறுப்பு.

கன்னி; காரியசித்தி, உறவினர் வருகை, பாராட்டு.

துலாம்; வாக்கு கலகம், மனப்போராட்டம், குடும்ப பகை.

விருச்சிகம்: தொழில்லாபம், பணபலம், புதிய முயற்சி.

தனுசு: மறைமுகப் பகை, கண் இடைப்பு, வாக்குவாதம்.

மகரம்: மனம்போல்வாழ்வு, வஸ்திரலாபம், குடும்பமகிழ்ச்சி

கும்பம்: பகை நீங்குதல், மாமியார் பாராட்டு, அந்நியர் உதவி

மீனம்: ஏமாற்றம், கடும் சினம் தொழில்பகை, துன்பம்

- ஜோஸ்யர்

---

## சூழல் பாதுகாப்பு பற்றி போட்டி நடத்த ஏற்பாடு

(வட்டுக்கோட்டை)

யாழ். மாவட்டத்தில் உள்ள கிராமங்கள் தோறும் 'சூழல் பாதுகாப்பு' என்னும் விடயம் பற்றிக் கட்டுரை, பேச்சு, சித்திரப் போட்டிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா மேற்கொண்டுவருகிருர்.

சனசமூக நிலையங்களுக்கு ஊடாக நடாத்தப்படவுள்ள இப்போட்டிகள் யாவும் கிராமிய மட்டத்திலும், பிரதேச மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் நடத்தப்பட உள்ளன.

இப்போட்டிகள் ஒவ்வொன்றும் தனித்தனியாகக் கீழ்ப் பிரிவு. மத்திய பிரிவு, மேற் பிரிவு என்னும், முப்பிரிவுகளில் சகலருக்கும் சந்தர்ப்பம் வழங்கும் வகையில் நடத்தப்படுவதற்கான துரித நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அறியக்கிடக்கின்றது. (139).

---

## 3 வருடங்கள் பூர்த்தியாயின் நிரந்தர அதிபர் பதவி

(வட்டுக்கோட்டை)

1989-12-31இல் மூன்று வருடங்கள் பூர்த்திசெய்து, கடமை புரியும் அதிபர்கள் நிரந்தரமாக்கப்பட உள்ளனர்.

இதற்கான தகவல்களைக் கோட்ட ரீதியில் அனுப்பி வைக்குமாறு கல்விச் சேவைகள் அமைச்சு கோரியுள்ளது.

நிரந்தர அதிபர்கள் இல்லாத பாடசாலைகளில் கடமை புரியும் அதிபர்களாகத் தற்காலிகமாக நியமிக்கப்பட்டு, 1989-12-31இல் மூன்று வருடங்களைப் பூர்த்திசெய்தவர்கள் அனைவரையும நிரந்தரமாக்குவதற்காகவே இவ்வாறான அதிபர்கள் பற்றிய தகவல்களை விபரமாகத் தெரிவிக்கும்படி கோட்டக் கல்வி உதவிப் பணிப்பாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (139)

---

## 'தராசு' கத்திக்குத்து தொடர்பாக 12 பேர் கைது

(சென்னை)

''தராசு' வார இதழ் அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற கத்திக்குத்து சம்பவம் தொடர்பாக தமிழ்நாடு அரசு முன்னாள் உள்துறைச் செயலர் ஆர். நாகராஜன் உட்பட 12பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தை தொடர்ந்து ஆர். நாகராஜன், குத்துச் சண்டை வீரர் ஒருவர் உட்பட வேறு ஆறுபேரும் பொலிஸில் சரணடைந்தனர்.

# இராணுவத்தில் ஆட்பலம் குறைவால் பெரும் நெருக்கடி

## - ஜெனரல் கொப்பேகடுவ பேட்டி -

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தில் ஆட்பலம் குறைவாக இருப்பது பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாக வடபகுதி இராணுவத் தளபதி ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ கொழும்பு பத்திரிகையொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; ஆனையிறவு-வெற்றிலைக்கேணி பாதை தொடர்பை புலிகள் துண்டிக்க முயல்வதை முறியடிப்போம். இப்பாதைப் போக்குவரத்தில் புலிகள் ஊடுருவுவதை தடுத்து தொடர்ந்தும் அதனைப் பாதுகாப்போம்.

அடுத்து நாம் என்ன மேற்கொள்ளப்போகிறோம் என்பதை இப்போது சொல்ல மாட்டேன். ஆனால் பயப்பட வேண்டியதொரு நிலையில்லை.

ஈழத்திற்கான யுத்தத்துக்கு ஆனையிறவுப் போர் ஒரு திருப்புமுனையா என்பதைக் காலம் தான் பதில் சொல்லும் என்றார். (சி)

# விமான விபத்திற்கு வெடிகுண்டு காரணம்

[புதுடில்லி]

கல்கத்தாவிலிருந்து சென்று விபத்தில் சிக்கிய இந்தியன் எயர்லைன்ஸ் விமானத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருக்கலாமென தற்போது சந்தேகம் எழுந்துள்ளது.

கல்கத்தாவிலிருந்து புறப்பட்ட மேற்படி விமானம் தரையிறங்க இருந்த இம்பால் பகுதியில் கடந்த இருபது வருடங்களாக கிளர்ச்சிக்குழு ஒன்று இயங்கிவருகின்றதாம்.

இம்பால் விமான நிலையத்தில் தரை இறங்குவதற்குச் சில நிமிடங்கள் இருக்கும் போது நடுவானில் வெடித்துச் சிதறியமையால்தான் பிரயாணிகளின் உடல்கள் கருகிய நிலையிலும், விமான உதிரிப் பாகங்கள் 2 மைல்களுக்கு அப்பாலும் சிதறிக்கிடப்பதாகவும், அமைச்சரொருவர் தெரிவித்துள்ளார். (வி)

## இராணுவ அதிகாரி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டுள்ளதாக அச்செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை கடந்த வாரம் பாகிஸ்தானிலிருந்தும், சீனாவிலிருந்தும், பெருமளவு ஆயுதங்கள் இலங்கைக்கு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# கச்சதீவை பெறுமாறு வாழப்பாடியும் வற்புறுத்து

(சென்னை)

"இந்திய-இலங்கை ஒப்பந்தப்படி கச்சதீவில் இந்திய மீனவர் தொழில்புரிய வகை செய்யப்பட்டுள்ளது. அந்த உரிமைகளை மீனவர்கள்பெற மத்திய அரசு இலங்கை அரசிடம் வலியுறுத்தவேண்டும்" என திரு. வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

கச்சதீவுப் பகுதியில் தமிழக மீனவர்கள் மீன் பிடிக்கவும், படகுகளை நிறுத்தவும், வலைகளை உலரவைக்கவும் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டிருந்தும் கூட இலங்கை அரசு இதை மீறுவதால் ஒப்பந்தத்தின்படி தமிழக மீனவர்களுக்கு உரிய உரிமைகளை மத்திய அரசு பெற்றுத்தரவேண்டும் என்றார். [பூ]

## வீர வணக்கம்

[யாழ்ப்பாணம்]

இராணுவத்துக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் 22-7-91 கட்டைக்காட்டுப் பகுதியில் நடைபெற்ற நேரடி மோதலில் போதுசண் [கிருஷ்ணசாமி கணேஸ், மட்டுநகர்], அன்பன் [முருகராசா ஸ்ரீதர், வல்வெட்டித்துறை] ஆகிய வீரவேங்கைகள் வீரமரணமடைந்தனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். (வி)

## பிரிட்டனை

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

நேற்று 17-ஆம் திகதிக்கு முன் பிரிட்டனை விட்டு வெளியேறுமாறு திரு கிட்டுவுக்குப் பிரிட்டிஷ் அரசு உத்தரவிட்டிருந்ததும் தெரிந்ததே.

## வடக்கு - கிழக்கு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

துடன் அக்கடற் பகுதியில் தீவிர ரோந்து நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் கச்சதீவில் எவரும் இறங்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. [153]

## புலிகளைச் சந்திக்க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இக்குழு யாழ்ப்பாணம் செல்வதற்கு வெளிவிவகார அமைச்சு "பச்சைக்கொடி" காட்டியிருப்பதாகவும் தெரிய வருகின்றது.

இக்குழுவில் இரு நியூஸிலாந்தவர்களும் ஒரு தமிழரும் இடம்பெற்றிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே இவர்கள் அரசுடன் பேச்சுக்கள் நடாத்தியுள்ளனர். முன்னரும் சமாதானக் குழுவின் 'குவாக்கர் அன் பீஸ்' விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை அரசுக்கு தெரிவித்திருந்ததும் அரசு தறபோது சமாதானத்துக்கான சில முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாகவும் கொழும்புச்செய்திகள் தெரிவிக்கின்றன. (எஸ்)

## ★ விலையில் வீழ்ச்சி

# பதுக்கிய பொருட்கள் வீதிக்கு வந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த அத்தியாவசியப் பொருட்கள் பல, பெரும்பாலும் வீதிகளுக்கு வந்துள்ளதனால் நேற்று பெருமளவு பொருட்களின் விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

கடந்த ஒருமாதமாக அத்தியாவசியப்பொருட்களை பதுக்கி வைத்து, கூடிய விலைகளில் மறைமுகமாக விற்றுவந்தவர்கள், தற்போது கொழும்பிலிருந்து பெருமளவு உணவுப் பொருட்கள் லொறிகள்மூலம் வந்துகொண்டிருப்பதினால், பதுக்கல் பொருட்களான அரிசி, சீனி, சவர்க்காரம், மண்ணெண்ணை போன்றவற்றின் விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. [வி]

## ராவய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வலகத்தில் அண்மையில் திடீர் முற்றுகையை நடாத்தி தேடுதல் நடத்தியதாக கூறப்படுகிறது. (மா)

## 2 ராணுவம் பலி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கையில் படையினர் ஈடுபட்ட போது உக்கிரமோதல் வெடித்ததாகவும் இம்மோதல் சில மணிநேரம் நீடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது [சி]

# எட்டு தமிழ் இளைஞர் பதுளையில் கைது

(கொழும்பு)

பதுளை பகுதியில் பொலிஸார் நடத்திய தேடுதல் வேட்டையொன்றில் எட்டு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

இரகசியத் தகவலொன்றினையடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்களுக்கு விடுதலைப் புலிகளுடன் தொடர்பு இருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது.

## பெண் அதிரடி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரடிப்படைப்பிரிவின் தரத்திற்கேற்ப பயிற்றுவிக்கப்படவுள்ளதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இப்பெண்கள படையணி யுத்தமுனைக்கு அனுப்பப்படுவது குறித்து முடிவு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அந்த அதிகாரி 'ராய்ட்டருக்கு தெரிவித்துள்ளார் [சி]

## பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு கறிப்பட்டமுறிப்பு சித்திவிநாயகராலயத்தில் விடுதலைப் புலிகளின் வெற்றியை வேண்டி சங்காபிஷேகமும் கூட்டுப்பிரார்த்தனையும் தீக்குளிப்பு வைபவமும் நடைபெற்றன.

## அடையாள அட்டை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

தனியார் கல்வி நிறுவன ஒன்றிய அங்கத்தவர்களுக்கான அடையாள அட்டை திங்கள், வெள்ளி ஆகிய இரு தினங்களிலும் சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு முன்பாக அமைந்திருக்கும் எமது அலுவலகத்தில் காலை 9 மணி முதல் 12 மணி வரை வழங்கப்படும். எம்மிடம் பதிவுசெய்து இவ்வருடம் ஆடி மாதம் வரை சந்தா செலுத்தியவர்களுக்கு மட்டுமே இவை வழங்கப்படும். ஆவணி மாதத்திற்குப் பின் அடையாளஅட்டைஇன்றி எந்தவொரு வகுப்புகளும் இயங்க முடியாத நிலை ஏற்படுமென மேற்படி ஒன்றியத்தின் யாழ். மாவட்ட பொதுச்செயலாளர் அறிவித்துள்ளார்.

## விபத்தில் பலி

[கிளிநொச்சி]

வீதிவிபத்தொன்றில் முருகண்டி இந்துபுரத்தை சேர்ந்த சாத்தையா [வயது-56] என்பவர் மரணமானார். கிளிநொச்சி கண்டிவீதியில் சைக்கிளில் சென்ற இவரை உழவு இயந்திரம் மோதியதாலேயே மரணம் சம்பவித்தது.

கடந்த வாரம் ஆனையிறவுப் போரில் இவரது மகன் ஒருவரும் வீரமரணம் எய்தியது குறிப்பிடத்தக்கது. (83)

# கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள் கொக்கோ கோலாவை பகிஷ்கரிக்க முடிவு

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழகத்தில் சிங்கள மாணவர்கள் சர்வதேசஉற்பத்திப்பொருட்களை பகிஷ்கரிப்பதென முடிவு செய்துள்ளனர்.

தேசிய சிந்தனைவாத அடிப்படையின், முதல்கட்டமாக 'கொக்கோகோலாவை' குடிப்பதில்லையென இவர்கள் முடிவு செய்துள்ளனராம். [153]

## ராணுவ

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வருவதாக கொழும்பு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள், பொதுமக்கள் நெருக்கமாக வாழும் இடங்களில் உள்ள இராணுவமுகாம்களை பொதுமக்கள் நடமாட்டம் குறைந்த இடங்களுக்கு மாற்றும் படியும் அரசுக்கு மகஜர் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [வி]

## சமஷ்டி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இலங்கை பிரச்சினையால் தமிழகம் வந்துள்ள சுமார் இரண்டரை லட்சம் தமிழ் அகதிகள் விடயம் இந்தியாவிற்கு மறுக்கமுடியாத ஒரு தலையிடியை கொடுத்துள்ளது.

இலங்கையின் இறைமையையும் தன்னாதிக்கத்தையும் பாதிக்காது சமஷ்டி முறையிலான தீர்வை இந்தியா ஆதரிக்கும் சாத்தியம் இருப்பதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது. [சி]

# க. பொ. த. (உயர்தர) மாணவர்களுக்கும் புலமைப் பரிசில்

[கொழும்பு]

க. பொ. த. உயர்தர மாணவர்களுக்கும் புலமைப்பரிசில் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மகாபொல புலமைப்பரிசில் திட்டம் போன்று இத்திட்டமும் ஒவ்வொரு பாடசாலையிலும் நடைமுறைப்படுத்தப்படும்.

இத்திட்டம் கொழும்பிலுள்ள பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் ஏனைய பாடசாலைகளுக்கும் விஸ்தரிக்கப்படுமென்று கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்.

## வடபகுதிக்கு 3 கப்பல்களில் உணவுப் பொருட்கள்

[கொழும்பு]

பருத்தித்துறை துறைமுகத்திற்கு மூன்று கப்பல்களில் உணவுப்பொருட்கள் கொழும்பிலிருந்து அனுப்பப்பட்டுள்ளது.

வடக்குநோக்கி தற்போது லொறிகளிலும் உணவுப் பொருட்கள் எடுத்துவரப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [153]

## கச்சதீவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செல்வி ஜெயலலிதா, கச்சதீவை இந்தியா மீளப்பெற வேண்டும் என்றும் இராமேஸ்வர மீனவர்கள் அங்கு மீன் பிடிக்க வசதிகள் ஏற்படுத்தப்படவேண்டும் என்றும் வற்புறுத்திவருகிறார்.

இதனையிட்டே இலங்கை வெளிவிவகார அமைச்சு, இந்தியாவிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகர் மூலம் ஆட்சேபனையை தெரிவித்துள்ளது. [பூ]

# புளொட் - ஜனாதிபதி சந்தித்து பேசுவர்

[கொழும்பு]

கொழும்பிலுள்ள புளொட் அமைப்பு இம்மாதம் 21-ம் திகதி ஜனாதிபதி பிரேமதாசாவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களிலிருந்து இடம்பெயர்ந்த அகதிகள் பிரச்சனை உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக பேச்சுவார்த்தையில் இடம்பெறவுள்ளது.

புளொட் தலைவர் த. சித்தார்த்தன், உபதலைவர் ஈரவை கந்தசாமி ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொள்வார்கள்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஆகஸ்ட் 18ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/169386/81